7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

39. 27-03-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட பின்னர் மாற்றப்பட்ட வணிக வரித் துறையின் II(1)/CTRE/41 (C-2)/98 ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடு செய்தது குறித்தும், 5-3-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II(1)/CTRE/22(a-)/97 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்தது குறித்தும், 2-6-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் துறையின் II(1)/CT/45(b-1)/2000 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்தது குறித்தும் மற்றும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், ஒரு வணிகர் பருத்தி நூல் கொள்முதல் செய்து, மேற்சொன்ன பருத்தி நூல் உள்ளாடை பொருட்கள் தயாரிப்பில் பயன்படுத்துகிற பருத்திமீது நேரடியாக செலுத்தவேண்டிய வரி அளவிற்கு பருத்தி உள்ளாடை பொருட்களின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரியைக் குறைப்பது குறித்தும் வணிக வரிகள் துறையின் 30-11-2001 ஆம் நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

40. வணிக வரிகள்-அறநிலையத் துறையில் உருவாகி, 10-4-1991 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட II(1)/CTRE/73/91 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து விட்டு அதற்குப் பதிலாகவும், சென்னை-41, கொட்டிவாக்கம், 144/7, பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள திருவாளர்கள் ரின்னெண்ட் ஆட்டோ புராடெக்ட்ஸ் மானுபாக்சரிங் லிமிடெட் நிறுவனம், 1-4-1990 முதல் 31-3-1995 வரையிலான 5 ஆண்டு கால அளவிற்கு செலுத்தத்தக்க வரியை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு தள்ளி வைப்பது குறித்து வணிக வரித் துறையின் 9-11-2001 ஆம் நாளிட்ட 103 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

41. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு

2002 மார்ச் 14]

நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

42. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

43. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

44. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

45. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

19. பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை (2001-2002).

20. பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை (2001-2002).

21. பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை (2001-2002).

22. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தாவது அறிக்கை (2001-2002).

—0—